வடக்கு மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல: **28/2017 (1)**

எனது இல : **NP/07/10/04/35**
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
20.12.2017

பிரதம செயலாளர்,
ஆளுநரின் செயலாளர்,
அமைச்சின் செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடக்கு மாகாணம்.

**வடக்கு மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிசிறப்பு தரத்துக்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2017**

2017ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் வடக்கு மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல: **28/2017**ல் வெளியிடப்பட்ட "வடக்கு மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையின் விசேட தரத்துக்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2017" பரீட்சை அறிவிப்பில் 4வது பந்தியில் முதலாவது பிரிவு, பந்தி 6 மற்றும் 7(ஆ) பந்தியில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

(i) பந்தி 4ல் முதலாவது பிரிவு மட்டும் பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

2017.12.31 ஆந் திகதிய அதிசிறப்பு தரத்தின் வெற்றிடங்களில் 50% அளவினை உரித்துடைய நியமனங்கள் மேற்கொள்ளப்படுவது, மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைவாக என்பதுடன், அதன் பிரகாரம் இந்தப்பரீட்சையில் நிரப்பப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 18 ஆகும்.

(ii) பந்தி 6 இற்கு பின்வருமாறு குறிப்புக்கள் உள்ளடக்கப்படுகின்றன:

(i) குறிப்பு:

வடக்கு மாகாண முகாமைத்துவ சேவையில் தற்போது பணியாற்றுகின்ற தரங்களுக்கு அமைவாக மேற்படி (அ), (ஆ), (இ) மூலம் காட்டப்பட்டுள்ள முனைப்பான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்து, தற்போது பணியாற்றுகின்ற தரத்திற்கு ஏற்புடையதாக சித்தியடைய வேண்டிய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை சேவைப்பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கமைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டிய ஆகக்குறைந்த அமர்வுகளில் 2017.12.31 ஆந் திகதி சித்தியடைந்திருந்தபோதிலும், நிர்வாக காரணங்களினால் சம்மந்தப்பட்ட வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் சலுகை கிடைக்கப் பெறுதலில் தாமதமேற்பட்டு, சேவையில் நிரந்தரப்படுத்தல் அல்லது தரமுயர்வு என்பன விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியில் உரித்தற்றுப் போனதன் காரணமாக மட்டும் செயலூக்கம்மிக்க வேலைக்காலம் பூர்த்தி செய்வதற்கு முடியாதுபோன அலுவலர்களும் இப்பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்கலாம்.

(ii) குறிப்பு:

எவ்வாறாயினும், அந்த அலுவலர்கள் விண்ணப்பம் செய்வதற்கும், பரீட்சையில் தோற்றுவதற்கும் வாய்ப்பு வழங்குதலானது, தரமுயர்வு பெறுவதற்கு தகைமையாகாது என்பதால் அதிசிறப்புத் தரத்திற்கு தரமுயர்த்தும் கடிதம் வழங்கப்படுவதற்கென்றால், உரியவாறு வடக்கு மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையில் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ளதாக திருப்தியடைந்து சம்மந்தப்பட்ட நிரந்தரப்படுத்தல்/தரமுயர்த்தல் என்பன மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) 7(ஆ) ஆம் பந்தியில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 2017.12.31 வரை நீடிக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் விண்ணப்பதாரிகள் 2017.12.31 ஆந் திகதியில் எல்லாத் தகைமைகளையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(iv) இந்தப் பரீட்சையின் பொருட்டு தற்போது விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பங்கள் அனுப்புவதை தவிர்க்கும்படி அறியத்தருகிறேன்.

**"பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 2017.12.15 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தலை தழுவியதாக இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது"**

**சி.ஏ.மோகன்ராஸ்**
செயலாளர்
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.